## தலைப்பு 20 – தேர்தல்கள் ஆணைக்குழு

-----------------------------------------------------------------------

### 1. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

-----------------------------------------------------

தேர்தல்கள் ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

----------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

------------------------------------------------------------------------------------------------------------------------

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6.1 (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) முன்னைய ஆண்டில் என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சுத்தப்படுத்தும் சேவைகள் மற்றும் பாதுகாப்பு சேவைகளுக்கான செலவினமான ரூபா 1,465,847 வாக்காளர் பதிதலுக்கான செலவின விடயத்தின் கீழ் கணக்கிலிடப்பட்டிருந்தது. | பாதுகாப்பு மற்றும் சுத்தப் படுத்தும் சேவைகளுக்காக சாதாரண காலங்களை விட தேர்தல் கால எல்லையில் அதிகமான ஊழியர் எண்ணிக்கையினை ஈடு படுத்துவதற்கு நேருதல், மற்றும் வார இறுதி, அரசாங்க விடுமுறை நாட்களில் இவ் ஊழியர்களை சேவையில் ஈடுபடுத்துவதனால் ஏனைய நாட்களை விட மேலதிக செலவினை ஏற்க நேரும். இந்த மேலதிக செலவுகள் தேர்தல்களை நடாத்தப் படுவதனாலேயே ஆகின்ற படியால் அவ்வாறான சதவீத பெறுமானம், தேர்தல்கள் செலவின விடயத்தின் கீழ் மேற் கொள்ளப்படுவது உண்டு. | செலவுகள் சரியான செலவின விடயத்தின் கீழ் கணக்கிலிடப்பட வேண்டும். |

### 1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று

ஆதனப் பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கிலிடுகையில் கீழுள்ள குறைபாடுகள் வெளியாகின.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | வாகனங்கள், காணி மற்றும் கட்டிடங்கள், மற்றும் பொறிகள் மற்றும் அலுவலக உபகரணங்களின் சென்ற ஆண்டின் இறுதி மீதிகள் மற்றும் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதிகளுக்கு இடையிலான வேறுபாடு முறையே ரூபா 7,134,127, ரூபா 1,204,464,069, மற்றும் ரூபா 25,712,259 ஆகும். | திறைசேரியின் அச்சுப் பதிவுகளின் ஆரம்ப மீதியுடன் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் ஆரம்ப மீதி பொருந்தாதிருப்பதனை எதிர் காலத்தில் சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருப்பதுடன் மேலும் தற்போதுள்ள வேறுபாடுகளுக்கான காரணங்கள் இனங்கண்டதன் பின்னர் தேவையான சீராக்கல்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான மீதிகள் காட்டப்பட வேண்டும் |
| (ஆ) | நிரந்தர சொத்துக்களுக்கான அட்டவணையிலிந்து தள்ளுபடி செய்யப்பட்டிருந்த ரூபா 15,400,000 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள், நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்த பதுள்ள ரத்வத்த மாவத்தை கட்டிடம் மற்றும் காணியினையும் தமன்கடுவ பிரதேசத்தில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தையும் மீண்டும் மாவட்ட செயலாளரிடம் கையளிக்கப்பட்டிருப்பதுடன், இதனை நிரந்தர சொத்துக்களுக்கான அட்டவணையிருந்து தள்ளுபடி செய்யப்பட்டிருந்த போதிலும் CIGAS வேலைத்திட்டத்தின் மூலம் கணக்கிலிடுவதனை தள்ளுபடி செய்யப்படவில்லை. ஆகையினால் அதனை எதிர் வருடம் சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள் சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நிரந்தர சொத்துக்களுக்கான பட்டியலின் படி 05 காணிகளின் மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 170,294,314 ஆக இருப்பினும் அதனை ரூபா 132,127,314 என கணக்கிலிடப் பட்டிருந்தது. | எதிர் வருடத்தில் சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள் சரியாக கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ஈ) | 2010 வருடம் ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டிருந்த ரூபா 25,748,000 பெறுமதியான மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளரின் உத்தியோகபூர்வ இல்லம், தேர்தல் அலுவலகம், மற்றும் அவற்றிற்கு உரிய காணி ஆகியவற்றினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை. | மட்டக்களப்பு அலுவலக கட்டிடம் மற்றும் காணியினை மதிப்பீடு செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதனால் நிரந்தர சொத்துக்களுக்கான அட்டவணை சரி செய்வதற்கும் அதன்படி நிதிக்கூற்றுக்ககளின் நிரந்தர சொத்துக்களின் பெறுமானத்தினை CIGAS வேலைத்திட்டத்தின் மூலம் சரி செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | - மேற்படி - |
| (உ) | சட்டரீதியான உரிமையினை கையேற்றுக் கொள்ளப்படாத ரூபா 1,142,185,612 பெறுமதி வாய்ந்த 09 காணிகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | ஆணைக்குழுவிற்கு கையளிக்கப்பட்டுள்ள, ஆயினும் இதுவரையிலும் உறுதிகளை தீர்க்கப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | ஆணைக்குழுவிற்கு உரிய காணிகளின் உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு துரிதமாக செயற்பட வேண்டும். |
| (ஊ) | 2018,2019 மற்றும் 2020 வருடங்களில் நீக்கல் மீதான அட்டவணை மற்றும் நிதிக் கூற்றுக்களில் உள்ளுள்ள நீக்கல் கிரயத்திற்கிடையில் முறையே ரூபா 3,883,977, ரூபா 4,953,979, மற்றும் ரூபா 11,307,281 என வேறுபாடுகள் நிலவின. | பொருத்தமற்றவை தொடர்பாக ஒப்பீடு செய்யப்பட்டு மாற்றங்கள் மேற்கொள்ளப் பட்டதன் பின்னர் சரியாக நீக்கப் பொருட்கள் மீதான அட்டவணைகளை கணக்குப் பிரிவிலிருந்து பெறப்பட்டதன் பின்னர் இவ் வேறுபாடுகளை சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்களுக்கான நீக்கல் தொடர்பாக சரியாக பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேணடும். |

**1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | காசு பாய்ச்சல் கூற்றினை மேலாந்த அடிப்பிடையில் தயாரிக்க படாமையினால் தனியார் சம்பள ஊதியங்கள் மற்றும் நடவடிக்கை செலவினங்கள், பௌதீகரீதியான சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கையேற்றல், கட்டுநிதியல்லா பெறுவனவுகள், முற்பணவு அறவிடல், வைப்புக்களுக்கான பெறுவனவுகள், மற்றும் வைப்புக்களுக்கான கொடுப்பனவுகள் ஆகியவற்றில் ரூபா 92,705,545 க்கான வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. | குறுக்குக் குறிப்பினை தவிர்த்து காசுமூலம் மேற்கொள்ளப்பட்ட அளவினை மாத்திரம் காசு பாய்ச்சல் கூற்றில் சேர்க்கப்பட்டுள்ளது. | சரியாக பதியப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் ரூபா 4,209,529 க்கான நிவாரண உதவி மற்றும் மாற்றல்கள் காசு பாய்ச்சல் கூற்றில் பதியப் பட்டிருக்கவில்லை. | ஆதனக் கடன் வட்டிக்கான 1506 செலவின விடயத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தவறுதலாக நிவாரண உதவி மற்றும் மாற்றல்களின் கீழ பதியப் பட்டிருக்கவில்லை. | சரியாக பதியப்படல் வேண்டும். |

### 1.6.4 ஆவணங்கள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

ஆணைக்குழுவினால் கீழ் காணும் ஆவணங்கள் பேணப்படாது இருந்ததுடன் இன்னும் சில ஆவணங்கள் முறையாகவும் இற்றைப்படுத்தியும் பேணப்படாதமையினை மாதிரி கணக்காய்வு பரீட்சிப்புக்களிலிருந்து அவதானிக்கப்பட்டது.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | நிதிப் பிரமாணம் 110 பிரகாரம் சேதங்கள் மீதான அட்டவணையினை இற்றைப் படுத்தப் பட்டிருக்கவில்லை. | சேதங்கள் மீதான அட்டவணையினை முறையாக இற்றைப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படவேண்டும். |
| (ஆ) | நிதிப் பிரமாணம் 1647(உ) பிரகாரம் வாகன அட்டவணையினை நாளாதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை. | நிரந்தர சொத்துக்களுக்கான அட்டவணையினை முறையாக இற்றைப் படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படவேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் | | | |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மைகள் | சிபார்சுகள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் தாபனக் கோவையின் xix ஆம் அத்தியாயத்தின் 5.2 மற்றும் 5.3 பந்தி | ஏற்பாடுகளுக்கு முரணாக வீட்டு வாடகையாக ஆணைக்குழவின் தலைவர், உறுப்பினர் மற்றும் இரு அதிகாரிகளிடமிருந்து முறையே மாதாந்தம் ரூபா 2000 மற்றும் தலா ருபா 1500 வீதம் பொருளாதார வாடகை அறவிடப் பட்டிருந்தது. | இக் கட்டிடம் பழமையான அலுவலக் கட்டிடமாக இருப்பதுடன் திருத்தப்பட்டு அதிகாரிகளுக்கு தங்குவசதிக்காக பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. இது உத்தியோகபூர்வ இல்லமாக பாவனைக்கு | வீட்டுவாடகை அறவிடப்படும் போது தாபகக் கோவையின் படி செயற்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தகுதியற்ற வசதிகளற்று இருந்தமையினால் அப்போதைய தேர்தல் ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் படி இதற்கு பொருளாதார வாடகையினை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | |
| (ஆ) | அமைச்சரவை தீர்மானங்கள . | | | | |
| | 2016 யூலை 05 திகதிய இலக்கம் அமப/16/1261/ 702/037-1 கொண்ட அமைச்சரவை தீர்மானங்கள். | i. | ஆணைக்குழுவின் தலைவருக்கு மீளாய்வாண்டில் 08 மாதத்திற்கான ரூபா 374,460 டீசல் லீட்டர் 1456 மற்றும் பெற்றல் லீட்டர் 1628 அங்கிகரிக்கப்பட்ட வரையறையினை விஞ்சி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது. | தேர்தல் வேலைகள் சம்பந்தமாக பல்வேறு கடமை தேவைப்பாடுகளுக்காக மாவட்டதிற்கு வெளியில் தூர இடங்களுக்கு செல்ல நேரும் சந்தரப்பங்களில் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மாதாந்தம் பெற்றுக் கொடுக்கும் எரிபொருள் அளவு போதாமையினால் மேலதிக எரிபொருள் தேவைப்பாட்டினை இவ்வாறு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்தின் படி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப் படல் வேண்டும். |
| | | ii. | ஆணைக் குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு மீளாய்வாண்டில் 03 மாதத்திற்கான அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவிற்கு மேலதிகமாக ரூபா 60,000 க்கான விசேட தொலைபேசி கொடுப்பனவினை செலுத்தப்பட்டிருந்தது. | தேர்தல் சமய கால கட்டத்தில், அரசியல் கட்சிகள் மற்றும் ஏனைய தரப்பினருடன், கடமைத் தேவைப்பாடுகள் நிமித்தம் தொலைத் தொடர்பு செயற்பாடுகளின் போது மேற்படி சுற்றறிக்கையின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள எல்லையினை விஞ்சி வீட்டுத் தொலைப்பேசி மற்றும் கையடக்கத் தொலைபேசி ஆகியவற்றிற்கான தொலைத் தொடர்பு செலவினங்களை ஏற்க நேர்ந்தமையினால் அக்கால எல்லைக்கு ஏற்றவாறு | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | ஆணைக்குழுவின் அனுமதியுடன் இந்த விசேட தொலைபேசி கொடுப்பனவினை ஆணைக்குழுவின் தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | |
| **iii.** ஆணைக் குழுவின தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு மீளாய்வாண்டில் 03 மாதங்களுக்கு அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுக்கு மேலதிகமாக ரூபா 42,000 கான விசேட தேர்தல் கடைமைக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | தேர்தலுக்கான வாக்கெடுப்பினை நடாத்தி, வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகளை வெளியிடும் வரை கடுமையாக உழைத்து கஷ்டப்பட்டு செயற்பட வேண்டியிருப்பதனால், ஏனைய தேர்தல் பணிக்குழாமிற்கு வழங்கப்பட்ட தேர்தல் சாவடி செயற்பாடுகளுக்கான முடிவுகளை அறிவிக்கப்படும் கொடுப்பனவு மற்றும் தொலைதூர அளவினை கவனத்திற் கொள்ளாது அன்றைய தினம் வழங்கப்படும் ஒன்று திரட்டிய கொடுப்பனவினை ஆணைக்குழு தலைவர் உள்ளிட்ட உறுப்பினர்களுக்கு வழங்கியமை நியாயமானதும் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமாக இருப்பதனால் அக் கொடுப்பனவு வழங்கப்பட்டது. | அமைச்சரவை தீர்மானப் படி கொடுப்பனவு வழங்குவதனை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2.2 அரச உத்தியோகத்தர்களின் முற்பண கணக்குகள் மீதான இணக்கக்கூற்று அறிக்கை

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் கடமையிலிந்து இடை நிறுத்தம் செய்யப்பட்ட ஊழியரிடமிருந்து ரூபா 164,811 | ஊழியருக்கு ஞாபகமூட்டல் கடிதங்கள் அனுப்பிவைக்கப் | கடன் தொகையினை அறவிடப்படுவதற்கா |

| | | |
|---|---|---|
| கடன் நிலுவை தொகை அறவிடப்பட வேண்டி இருந்தது. | பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் பிணையாளர்களிடமிருந்து கடன் தொகையினை அறவிடப் படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | ன நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |

**2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ஆணைக்குழுவிற்கு சொந்தமான ஆதனத்திற்கு மெட்றோ கொழும்பு நகர அபிவிருத்தி திட்டத்தின் மூலமாக வழங்கப்பட்ட ரூபா 5,200,000 ஆதன நஷ்டஈட்டு ஆணைக்குழுவின் தலைவர் உறுப்பினரொருவர் மற்றும் இரு அதிகாரிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினரொருவர் உள்ளிட்ட இன்னும் இரு அதிகார்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ள இக் கொடுப்பனவு, தேர்தல்கள் ஆணைக்குழுவினை அறிவுறுத்தப்பட்டு, ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வங்கிக் கணக்கு ஊடாக மேற்கொள்ளப்பட்டில்லை. அது தொடர்பாக சம்பந்தப்பட்ட கொடுப்பனவினை மேற்கொண்ட நிறுவனத்திடமிருந்து விடயத்தினை தெளிவு படுத்திக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்பதனை அறியத் தருகிறேன். | திருத்தப் படுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியமை. |
| (ஆ) 2016 யூலை 05 முதல் அனுமதி வழங்கப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானம் மற்றும் பாராளுமன்றத்தில் அங்கிகரிக்கப்பட்ட பிரேரணையின் படி ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு தமது வதிவிடத்திலிருந்து ஆணைக்குழு அலுவலகத்திற்கு செல்வதற்கு உள்ள தூரம் | 2016 யூலை 05 ஆந்திகதி முதல் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அமைச்சரவை தீர்மானம் மற்றும் பாராளுமன்றத்தில் அங்கிகரிக்கப்பட்ட பிரேரணையின் படி ஆணைக்குழுவின் இவ் உறுப்பினருக்கு பிரயாணக் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. அக்கொடுப்பனவு | அமைச்சரவின் தீர்மானம் மற்றும் பாராளுமன்ற அங்கிகார பிரேரணையின் படி செயற்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| கி.மீ 350 க்கு கூடுதலாக இருப்பின் ரூபா 50,000 க்கான பிரயாண கொடுப்பனவு உரித்துள்ளதாக இருப்பினும் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் பொதளாதார வாடகை செலுத்திக் கொண்டு வந்திருந்த ஆணைக்குழுவின் உறுப்பினர் ஒருவருக்கு 04 ஆண்டு காலத்திற்காக ரூபா 2,400,000 க்கான பிரயாணக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. | அவருடைய யாழ்ப்பாண பிரதேச நிரந்தர வதிவில்லத்திலிருந்து இராஜகிரியையில் உள்ள தேர்தல்கள் செயலகத்திற்கு வருவதற்கும் மீண்டும் இல்லத்திற்கு திரும்ப செல்வதற்கு மாத்திரம் ஆகும். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| (அ) ரூபா 597,618 கிரயமான கைசுத்தம் செய்யப்படும் திரவக் கேன் தொள்வனவு செய்வதில் பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.3.2 பந்தியின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | 2020 மே மாதம் ஆகும் போது கொவிட் 19 தொற்று நிலைமையின் அபாயம் நாடுமுழுவதும் பரவியதன் காரணமாக அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் அன்றாட செயற்பாடுகள் ஸ்தம்ப நிலையை அடைந்திருந்தன. இதற்கிடையே 2020 பாராளுமன்ற தேர்தல் சம்மந்தப்பட்ட ஆரம்ப அலுவல்களை முன்னெடுத்துச் செல்வதற்கு நேர்ந்தமையினால் கை சுத்தப்படுத்தும் திரவகத்தினை அவசரமாக கொள்வனவு செய்ய வேண்டி இருந்தது. அச் சமயம் அரசுக்கு இழப்பினை ஏற்படாதவாறு | பெறுகை வழி காட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறைந்தபட்ச விலையினை சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒரு நிறுவன மூலமாக இக் கொள்வனவினை மேற்கொள்ளப்பட்டது | |
| (ஆ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.8.1 (ஆ) பந்தியின் பிரகாரம் ரூபா 89,319,056 பெறுமதி வாய்ந்த கை சுத்தம் செய்யப்படும் திரவத்தினை கொள்வனவு செய்யப்படும் தொழில் நுட்ப மதிப்பீட்டு குழுவில் விடயம் தொடர்பான நிபுணரொருவர் நியமிக்கப் பட்டிருக்கவில்லை. | கை சுத்தப்படுத்தும் திரவம் கொள்வனவு செய்வதற்காக நியமிக்கப்பட்ட தொழில் சட்ட மதிப்பீட்டு குழுவில் பெறுகை செயற்பாட்டு நடைமுறையினை பற்றி போதுமான அளவு அறிவுள்ள அதிகாரிகள் உட்பட்டிருந்தனர், தொழில்நுட்ப நிபுணர்கள் இல்லாதிருந்ததனால் சுகாதார அமைச்சிலிருந்து இந்கொள்வளவு தொடர்பாக முழுவிபரங்களும் மின் அஞ்சல் முறையில் தேர்தல்கள் ஆணைக் குழு பெற்றுக்கொண்டது. | பெறுகை வழி காட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்பட வேண்டும். |

## 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 வருடம் முதற்கொண்டு ரூபா 144,900 கிரயமான மோட்டார் சைகிள் பயன்படுத்தாது விடப்பட்டிருந்தது. | அடுத்த வருடம் பொருட்கணப்பின் போது இந்த மோட்டார் சைக்கிளினை விலை மனு கோரப்பட்டு விற்பனைக்கு விடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்வதற்கு பதியப் பட்டுள்ளது. | சொத்துக்களை உச்சகட்ட உற்பத்தித் திறனுடன் பாவனை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | ஆணைக் குழுவிற்கு சொந்தமில்லாத காணியில் ரூபா 1,771,701 செலவிடப்பட்டு கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | பிரதான அலுவலகத்திற்கு சமீபமாக அமைந்துள்ள ஹுன்எல நிலப் பகுதியில் உள்ள ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியினை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. | ஆணைக்குழுவிற்த உரித்தான காணிகளின் சட்டரீதியான உறுதிப்படுத்துவதற் கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |

## 3.3 இழப்புக்களும் சேதங்களும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 மற்றும் 2019 வருடங்கள் முதல் இருந்து வரும் முழுத் தொகை ரூபா 122,900 க்கான இழப்புகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதி வரையிலும் நிதிப் பிரமாணப் படி செயற்பட்டிருக்கவில்லை. | இதற்கான ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டு இல்லாமையினால் ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டதன் பின்னர் ஏடுகளிலிருந்து தள்ளுபடி செய்யவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.4 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 வருடம் பொருத்தப்பட்ட கெமரா முறைமையினை நீக்கிவிட்டு ரூபா 2,542,004 பெறுமதி வாய்ந்த, 52 கெமராக்களை கொண்ட புது முறைமையினை தாபிக்கப்பட்டு இருந்ததுடன் பழைய முறைமையிலிருந்து 12 கெமராக்கள் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்த போதிலும் மீதியுள்ள 20 கெமராக்களும் பாவனை செய்யாது விடப்பட்டிருந்தன. | 52 கெமராத்களை கொண்ட புது முறைமைமயினை பொருத்துவதற்கு ஆணையாளர் அதிபதியின் அனுமதியினை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. நீக்கப்பட்ட கெமரா முறைமையில் 12 கெமராக்கள் கம்பஹா அலுவலகத்திற்கு போதுமானதாக இருந்தமையினால் அவற்றை கம்பஹா அலுவலகத்தில் பொருத்தப்பட்டன. மீதியாக உள்ள அளவினை, தேவையினை தேடி கண்டுபிடிக்கப்பட்டு வேறொரு மாவட்டத்தில் உள்ள தேர்தல்கள் அலுவலகத்தில் உபயோகப்படுத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | தேவைக்கு ஏற்றவாறு கொள்வனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4 பேண்தகு அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| ஆணைக்குழுவினால் பேண்தரு அபிவிருத்தி இலக்கினை இனங்கண்டு கொள்ளப்படவில்லை. | சம்பந்தப்பட்ட சுற்றறிக்கையின் படி பேண்தகு அபிவிருத்தி நோக்கினைக்கு தேர்தல்கள் ஆணைக்குழு நேரடியாகத் தொடர்பு கொள்ளப்படாத நிறுவனமாக இருப்பினும் மறைமுகமாக அதனுள் உட்பட்டுள்ள செயற்பாடுகளுக்கு வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கும் பொழுது ஒதுக்கீடு ஒதுக்கப்பட்டுக் கொள்கிறது. அவ் ஒதுக்கீடுகளை பயன் படுத்தப்பட்டு பேண்தரு அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்வதற்காக மறைமுகமாக பங்களிப்பு மேற் கொள்ளப்படுவதனை அறியத்தருகிறேன். | பேண்தகு அபிவிருத்தி இலக்கினை இனங்கண்டு கொள்வதற்கு செயற்பட வேண்டும். |

## 5. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| நிறைவேற்று தரத்திலான 06 பதவிகள் 2 வருடம் முதல் 6 வருட காலமாக பதில் கடமையாற்றுவதற்கு அல்லது கடமையினை நிறைவேற்றும் அடிப்படையில் அதிகாரிகளை ஆட்சேர்ப்பு செய்யப் பட்டிருந்ததுடன் அங்கிகரிக்கப்பட்ட எண்ணிக்கையையும் விஞ்சி மூன்று அதிகாரிகள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்தனர். | ஆணைக்குழுவினால் அங்கிகரித்துக் கொள்ளப்பட்டுள்ள நிறைவேற்று தரத்திலான 06 பதவிகளுக்கு தகுதியின் படி பதில் கடமையாற்றுவதற்கு அல்லது கடமையினை நிறைவேற்றுவதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். எதிர்காலத்தில் முழு நேரத்திற்காக அப்பதவிகளுக்கு அதிகாரிகளை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | அத்தியாவசியமான பதவிகளுக்கு முழுநேர அதிகாரிகளை இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். |